# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்)

**கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன அவர்களால் 2013, மே மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, மே மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *241 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007280 - 350 (2013/05)

**கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம்**
**(கூட்டிணைத்தல்)**

## கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

''கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இலக்கம் 35, அநகாரிக தர்மபால மாவத்தை, கண்டி என்னும் முகவரியில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம் 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம், தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''கழகம்'' என குறிப்பீடுசெய்யப்படும்) கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம்'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ்

2-PL 007134 -50 (2013/03)

இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) பௌத்த மக்களின் கல்வி, கலாசார, சமூகவியல், சுகாதார மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக கண்டி தர்மராஜ கல்லூரியின் செயற்பாடுகளுக்கு ஒத்தாசை நல்குதல் ;

(ஆ) சுயமுன்னேற்றத்திற்காக தனிமனிதர்களின் தன்னார்வ முயற்சிகளை உபயோகத்திற்கொள்ள வழிகோலுதல் ;

(இ) கழகத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவசியமான வளங்களை பெற்றுக்கொள்வதற்கு, அவ்வாறான திட்டங்களை அமுலாக்கல் ;

(ஈ) கல்வி வட்டம், கருத்தரங்குகள், செயலமர்வுகள், போதனைகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள், தர்ம பாடசாலை மற்றும் போயா தின நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ளல் ;

(உ) புத்த மதம் மற்றும் பௌத்த கலாசாரம் ஆகிய கற்கைளுக்காக உதவுதொகைகள், புலமைப்பரிசில்கள், பண உதவிகள், பரிசில்களை வழங்குதல் ;

(ஊ) நிதிரீதியாக அல்லது பொருள்ரீதியாக பரிசில்கள், உதவுதொகைகள், அன்பளிப்புகள், மானியக்கொடைகள் மற்றும் கொடைகள் ஆகியவற்றை வழங்குதல், பெற்றுக்கொள்ளல் மற்றும் சேகரித்தல் ;

(எ) ஏதும் உதவுதொகைகள், உபகாரங்கள் தேவைப்படும் மாணவர்களுக்கு அவ்வகையில் உதவியளித்தல் ;

(ஏ) நூல்நிலையங்கள், வாசிப்புசாலைகள் மற்றும் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை அமைத்து அதனை கொண்டுநடாத்துதல் ;

(ஐ) புத்தகங்கள், பருவ வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகளை சேகரித்தல், பதிப்பித்தல், வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல் ;

(ஒ) கழகத்தின் நோக்கங்களை ஒத்த ஏனைய இயக்கங்களுடன் ஒத்துழைத்தல் ;

(ஓ) நம்பிக்கைப்பொறுப்பாளராக செயற்படுதல் மற்றும் பௌதீக வளங்களை முகாமைசெய்தல் ;

(ஔ) கண்டி தர்மராஜ கல்லூரியினை அபிவிருத்தி செய்தல் ; அத்துடன்

(க) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வாறானவையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய கௌரவ தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் அத்துடன் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கப்படும் மேலும் இருபத்தைந்து உறுப்பினர்களுக்குக் குறையாதவர்களும் அடங்கிய முகாமைச்சபையொன்றினால் அதன் விதிகளுக்கிணங்க நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை, இச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த கழகத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும். முதலாவது முகாமைச் சபையின் வெற்றிடங்கள் ஏனைய உறுப்பினர்களின் சம்மதத்துடன் நிரப்பப்படுதல் வேண்டும். அச்சபையின் உறுப்பினர்களினூடாகவே பிரதான நிறைவேற்றதிகாரிகள் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** *(1)* கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை வகுப்பாக்கம் செய்தல், சேர்த்துக் கொள்ளல், அவர்கள் விலகுதல், பதவிதுறத்தல், அவர்களை நீக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், பதவிதாங்குநர்கள் பதவி விலகுதல், அவர்களை பதவி நீக்கம் செய்தல் அல்லது அவர்களின் பதவியை வறிதாக்குதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள் மற்றும் பணிகள், கடமைகள் ;

(இ) முகாமைச் சபையின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் அவர்களுடைய தத்துவங்கள், பணிகள், கடமைகள் அத்துடன் முகாமைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும் முகவர்களினதும், சேவையாளர்களினதும் தத்துவங்களும், நடத்தையும் கடமைகளும், பணிகளும் ;

(உ) முகாமைச் சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் தொடர்பாக கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும் இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதியின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள், அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்றாற்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

(4) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் நிறுவகத்தின் விதிகள், அவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, இறுதிவிருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்றவகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைச் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்றவகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

(4) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் புனரமைக்கும் அபிவிருத்தி செய்யும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்கு ஏதேனும் பெறுமானத்தேய்வு நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தைக் கூட்டுத்தாபனம் தாபிக்கலாம்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும். கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப் பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத் தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவு முள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாப னத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவரது மற்றும் செயலாளரினது அல்லது பொருளாளரது முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகா தென்பதுடன் : அவர்கள் தாங்கள் சமூகமாயிருந்ததற்கு அடை யாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்ப மிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறான தாதலும் வேண்டும்.

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று கழகத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்திகதியன்று கழகத்திற்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கழகத்தினால் செலுத்தப்படற்பாலனவும் கழகத்திற்கு செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள்.

**12**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன்பெறும் சொந்தக்காரராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையாக எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற, வில்லங்கத்துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.

கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப் பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டததில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறேவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**15**. ஆள் எவரும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துகின்ற நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டுமென கருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பொறுப்பாளியாக மாட்டார்.

நல்லெண் ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத்தர வாதம்.

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

## 10 கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்)

5(2) இற்கிணங்க முகாமைச்சபை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. கே. எம். ஆர். குலதுங்க |
| செயலாளர் | : | திரு. பிரியாந்த அபேகோன் |
| பொருளாளர் | : | திரு. திஸ்ஸ ஜயசிங்ஹ |

1. திரு. செனரத் ஜயசுந்தர
2. திரு. சரத் பெர்னாண்டோ
3. திரு. என். டபிள்யூ. வீரகோன்
4. திரு. அஜித் நாரம்பனாவ
5. திரு. ஆதர் சில்வா
6. திரு. ஆனந்த ஜயசுந்தர
7. திரு. சீவலி அபேசேகர
8. திரு. வோல்டர் ரணசிங்ஹ
9. திரு. சாதர தென்னகோன்
10. திரு. ஜெகத் சமரசிங்ஹ
11. திரு. மஹிந்த செனவிரட்ன
12. திரு. சஞ்சய எதிரிசூரிய
13. திரு. சீ. எஸ். ஏகநாயக்கா
14. திரு. கே. பீ. சமரகோன்
15. திரு. ஏ. பீ. சமரகோன்
16. திரு. மஹிந்த பெத்தியாகொட
17. திரு. உதய யட்டவர
18. திரு. எஸ். பீ. ஹேரத்
19. திரு. சரத் முனவீர
20. திரு. யாசஸ் சந்திரசேகர
21. திரு. பிரசாத் விதானகே
22. திரு. சமன் ரத்நாயக்கா

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்